அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



New No.46,Old,No.4,Ramakrishna Street,
(North Usman Road)T.Nagar,Chennai-6000117.
044-28143306 / 28143307 / Fax 42124624
www.aismk.in

அ.எண்.210/2015
தேதி.03.09.2015

# சரவணா ஸ்டோர்ஸ் உரிமையாளர் மறைவு
# ச.ம.க.நிறுவனர்-தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ இரங்கல்

*சென்னை சரவணா ஸ்டோர்ஸ் உரிமையாளர் திரு.யோகரத்தினம் அவர்களது மறைவு மிகவும் வேதனை அளிப்பதாக உள்ளது. மிகவும் வசதி குறைந்த குடும்பத்தில் பிறந்து சிறிய அளவிலிருந்து வணிகம் தொடங்கி இன்று நுகர்வோர் பொருட்களின் விற்பனை உலகில் தனக்கென ஒரு சாம்ராஜ்யத்தை நிறுவி, அதன் மூலம் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பையும் வழங்கியிருக்கும் அளவிற்கு உய்ர்ந்திருக்கும் மாமனிதர் அவர். கடின உழைப்பும், உறுதியும் இருந்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்ததோடு, வருங்கால சந்ததியினருக்கு வழிகாட்டும் அளவிற்கு வரலாறும் படைத்திருக்கக்கூடிய சாதனையாளரும் ஆவார்.*

*அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்கள் மற்றும் அவரது நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்